# அ.கலிய மூர்த்தி த.கா.ப
# முன்னாள் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்
# திருச்சிராப்பள்ளி

முன்னாள் காவல் துறை கண்காணிப்பாளரான திரு.அ.கலியமூர்த்தி தஞ்சை மாவட்டம் பூதலூரைச் சேர்ந்தவர். இவரது தந்தை பெயர் அய்யாவு, தாயின் பெயர் காமுஅம்மாள் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

இவர் 1976 ஆண்டு காவல்துறை அதிகாரியாக பணியில் சேர்ந்து 35 ஆண்டுகள் திருச்சி, கோவை, சென்னை ஆகிய இடங்களில் மிகச்சிறப்பாக பணியாற்றியவர்.

ஆகில இந்திய அளவில் நடந்த காவல்துறை புலனாய்வு மற்றும் துப்பாக்கிசுடும் போட்டிகளில் 1980 நாசிக், 1983 லக்னோ, 1986 காஷ்மீர் அகிய இடங்களில் தமிழகத்தின் சார்பாக கலந்து கொண்டு 3 முறையும் தங்கப்பதக்கம் பெற்று தமிழக காவல் துறைக்கு பெருமை சேர்ந்தவர்.

1996ம் ஆண்டு திருச்சி சிறப்பு புலனாய்வு பிரிவு அதிகாரியாக பணிபுரியும் போது பாண்டியன் எக்பிரஸ் ரயிலில் குண்டு வைத்த தீவிரவாதிகளையும் 2001ம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற வக்கீல் கொலைவழக்கில் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த நிழல் உலக தாதக்களையும் தனது சிறப்பான புலன் விசாரனை மூலம் கண்டுபிடித்தது கைது செய்ததற்காக தமிழகத்தின் சிறந்த புலனாய்வு அதிகாரிக்கான தங்க பதக்கர்தை தமிழக முதல்வரிடம் பெற்றவர்.

2001ம் ஆண்டு தீவிரவாதிகளை தனது உயிரையும் பொருட்படுத்தமால் பிடித்ததற்காக தமிழக முதல்வரின் வீரதீர செயலுக்கான தங்கப்பதகத்தை பெற்றவர்.

2002ம் ஆண்டு சென்னையில் பணிபுரிந்த போது தீவிரவாதிகளுடன் நேருக்கு நேர் ஏற்பட்ட துப்பாக்கி சண்டையின் போது கையில் குண்டடிபட்டும் தைரியமாக இரண்டு தீவிரவாதிகளை சுட்டு கொன்றதற்காக தமிழக அரசு இவருக்கு சிறப்பு பதவி உயர்வு (Accelerated Promotion) கொடுத்து கௌரவித்தது.

2006ம் ஆண்டு ரெளடிஸியத்தை ஒழிப்பதற்கான சிறப்பு அதிரடிப்படையின் தலைவராக அரசால் நியமிக்கப்பட்டு 6 மாதத்திற்குள் டெல்டா மாவட்டங்களில் ரெளடிஸியத்தை முழுமையாக ஒழித்து அமைதியை நிலைநாட்டி தமிழக முதலமைச்சரின் தங்கப்பதக்கத்தையும் அரசங்கம் மற்றும் பொதுமக்களின் பாராட்டையும் பெற்றவர்.

2008ம் ஆண்டு சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியா முழுவதும் சென்று "கவனத்தை திசைதிருப்பி" வங்கினளில் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டு காவல்துறைக்கு சவாலாக விளங்கிய திருச்சி இராம்ஜிநகர் கொள்ளையர்கள் 100 பேரை ஒரே இரவில் கைது செய்து சிறையிலடைத்ததோடு மட்டுமின்றி, அவர்கள் மனம் திருந்தி மறுவாழ்வு வாழ அரசு வங்கியிடமிருந்து ரூபாய் 1 கோடிக்கும் மேலாக நிதி உதவி பெற்று அவர்களது வாழ்கையில் ஒளியேற்றியவர்.

2006ம் ஆண்டு திருச்சியில் முதல்முதலாக நவீன கட்டுபாட்டு அறையை உருவாக்கி போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி, விபத்துக்களை வெகுவாக குறைத்து பலரதுவிலை மதிக்க முடியதா உயிர் விபத்துக்களில் பலியாகாமல் பாதுகாத்தவர்.

2008ம் வருடம் இவருடைய அப்பழுக்கில்லாத சேவையைப் பாராட்டி திரு.A.P.J. அப்துல்காலம் அவர்கள் ஜனாதிபதியாக இருந்த போது இந்திய அரசு காவ்துறையின் உயரிய விருதான ஜனாதிபதி வருதினைக் கொடுத்து இவரை கௌரவித்தது.

பணி நிறைவுக்குப்பின் கிராமப்புற ஏழைகளுக்கு உதவும் உன்னத நோக்கத்தோடு தனது சொந்த கிராமத்தில் மனைவி பெயரில் "சூரியா மருத்துவமனை" ஒன்றை நிறுவி மருத்துவ மேற்படிப்பு படித்த தனது பிள்ளைகள் மூலம் சேவை செய்து வருகிறார்.

மனைவி பெயர் சூரியகலா, இவருடைய மகன் Dr.K. Ananth M.D(PAED), மகள் Parimala Rani M.D (O.G), மருமகன் Dr.K.Karthikeyan M.S (Ortho), மருமகள் Dr. Keerthana Priyadarshni DNB (O.G) அனைவருமே சிறந்த மருத்துவர்கள்.

சமூக ஊடகங்களான facebook, youtube, whatsapp, தொலைகாட்சி, வானொலி, அனைத்திலும் இவரது உரைவீச்சு மிகவும் பிரசித்தி பெற்றது் மலேஷியா, சிங்கப்பூர், சவூதிஅரேபியா, குவைத், கனடா, அமெரிக்கா, மொரீஸியஸ் என்று உலக நாடுகளில் தொடர்ந்து உரையாற்றி வருகிறார்.

தேசத்தின் எதிர்காலம் வகுப்பறைகளில் தான் தீர்மானிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த இவர் தமிழகத்தின் நூற்றுக்கணக்கான கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் மற்றும் இலட்சக்கணக்கான மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில், தனது அறிவு பூர்வமான அழகு தமிழ் பேச்சால் அனைவரின் உள்ளங்களிலும் ஒளியேற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.